அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல: 20/89

அரசாங்க நிருவாக, மாகாணசபைகள்,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு- 07.
1989, மார்ச்சு 23 ஆந் தேதி.

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
திணைக்களங்களின் தலைவர்கள்,
அரசாங்க கூட்டுத்தாபனங்களின்
தலைவர்கள் அனைவருக்கும்.

## விசேட லீவு - தாபன விதிக்கோவை அத்தியாயம் XII

01. உபபிரிவு 12:1 ஐப் பின்வருமாறு திருத்துக :-

வெள்ளிக் கிழமையில் சமய அனுட்டானங்களை மேற்கொள்ளும் நோக்கத்திற்காக முஸ்லிம் உத்தியோகத்தர் ஒருவருக்கு சேவையின் அவசரத் தேவைகளுக்கு உட்பட்டு பி.ப.12.15 மணி தொடக்கம் இரண்டு மணித்தியாலத்திற்கு மேற்படாத விசேட லீவு வழங்கப்படலாம்.

02. உபபிரிவு 12:12 ஐ பின்வருமாறு திருத்துக:-

'இத்தா' அனுட்டிப்பதற்கான லீவு -

'இத்தா' அனுட்டிப்பதற்காக திருமணம் முடித்த முஸ்லிம் பெண் உத்தியோகத்தரொருவருக்கு 4 மாதங்கள் 10 நாட்களுக்கு மேற்படாத லீவு வழங்கப்படலாம். இந்த லீவு சம்பந்தப்பட்ட ஆண்டின் ஓய்வு லீவுக்கும் அவர் அரசாங்க சேவையில் பணியாற்றிய காலம் முழுவதிலும் அவரினால் உபயோகிக்கப்படாமல் சேர்ந்த (திரண்டதும் காலங்கடந்ததுமான) ஓய்வுலீவு முழுவதற்கும் எதிராகச் சரியீடு செய்யப்படலாம். இதற்கு அப்பாற்பட்ட எந்த லீவும் "அரைச் சம்பளத்துடனான" லீவாக இருத்தல் வேண்டும்.

ஒப்பம்: சிறில் கமகே
செயலாளர்,
அரசாங்க நிருவாக, மாகாணசபைகள்,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு.

நளீ/23